2023-ஆம் வருடம் ஜனவரி மாதம் 24–ம் தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற அவசர கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மை நகல்.

முன்னிலை:– திரு.பி.ஏஜாஸ் அஹமத்
நகர மன்றத்தலைவர், ஆம்பூர் நகராட்சி

1, அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ME.3) துறை, நாள் 24.08.2022–ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2–SWM–1, நாள் 10.01.2023–ல் ஆம்பூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில், வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் அடிப்படையில், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு நடவடிக்கை மேற்கொள்ள மூன்றாண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு அனுமதித்து அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

| Quantity of Waste Generated (TPD) | Rate per Tonne (in Rs) | Estimated base cost per day (Rs .in lakh) | Estimated base cost per year (Rs. In lakh) | Applicable GST 18% and LWF 1% (Rs. In lakh) | Estimated total cost per year (Rs. In lakh) |
|---|---|---|---|---|---|
| 37.93 | 4,034.15 | 1.53 | 558.45 | 106.10 | 664.55 |

மேற்படி உத்தரவில் நகராட்சியின் வாகனங்களை வாடகை அடிப்படையில் தனியார் ஒப்பந்ததாரரிடம் வழங்கிடவும், நாள் ஒன்றுக்கான வாடகை நிர்ணயம் செய்யப்பட்டும், அதற்குரிய தொகையினை பிரதி மாத பட்டியலில் பிடித்தம் செய்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| S.No | Category | Available Vehicles | After ULB use available for Rent | Rent fixed by per day | Collectable Rent per day |
|---|---|---|---|---|---|
| 1 | Tricycle | 7 | 7 | 15 | 105 |
| 2 | BOV | 35 | 35 | 100 | 3500 |
| 3 | LCV | 10 | 8 | 200 | 1600 |
| 4 | HCV | 1 | 1 | 400 | 400 |
| | **TOTAL** | **53** | **51** | | **5605** |

மேற்படி உத்தரவில் தற்போது நகராட்சியில் பணிபுரிந்து வரும் நிரந்தர தூய்மைப்பணியாளர்கள் பணி செய்வதற்கான பணிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| S.No | Activity | No of Permanent Cleanliness Worker Assigneded | LCV |
|---|---|---|---|
| 1 | Park Sweeping | 2 | |
| 2 | For Market | 7 | 1 |
| 3 | For Bushes Cleaning | 4 | 1 |
| 4 | For Removal Road Side Earth | 2 | |
| 5 | MCC (Wet waste processing centers) | 15 | |
| 6 | RRC ( Dry waste handling centers) | 3 | |
| 7 | Municipal Health Center | 2 | |
| 8 | CT/ PT Cleaning | 8 | |
| 9 | For Fogging and anti-malarial | 6 | |
| | **TOTAL** | **49** | **2** |

மேற்படி உத்தரவில் தனியார் ஒப்பந்ததாரர் மேற்கொள்ள வேண்டிய பணிகள் விவரம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Desctiption of the activity | Nos/Length |
|---|---|---|
| 1 | Door to Door collection of segregated waste from Households using pushcart and handover the waste to processing center / handling facilities | 6408 Households |
| 2 | Door to Door collection of segregated waste from Households using BOV and handover the waste to processing center / handling facilities | 12816 Households |
| 3 | Door to Door collection of segregated waste in Households using LCV and handover the waste at processing center / handling facilities | 12816 Households |
| 4 | Door to Door collection of segregated waste in small size Commercial Establishment using Low Commercial Vehicle and handover the waste at processing center / handling facilities | 1472 Commercial Establishment |

| | | |
|---|---|---|
| 5 | Door to Door collection of segregated waste in larger size Commercial Establishment using High Commercial Vehicle and handover the waste at processing center / handling facilities | 981 Commercial Establishment |
| 6 | Sweeping cleaning and removal of garbage in the Bus stand B type and handover the waste to processing center / handling facilities | 1.00 No |
| 7 | Sweeping the Bus Route Roads on daily basis and handover the waste at processing center / handling facilities | 26.96 KM |
| 8 | Sweeping the Bus Route Streets on daily basis and handover the waste at processing center / handling facilities | 3.03 KM |
| 9 | Slit removal in Storm Water Drain covering one ward in a day collect 8 tones in a day | 15.30 KM |

மேற்கண்டவாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள், வழிகாட்டுதலின்படியும், மாநில ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளின் படியும், வெளிக்கொணர்வு வழங்குபவர் / நிறுவனம் / ஒப்பந்ததாரர் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், இப்பணிகளுக்கு மூன்று வருடங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மற்றும் ஒரு வருடத்திற்கான தோராய செலவினம் ரூ.664.55 இலட்சத்தில் (சேவை கட்டணம் உட்பட) திட்டப்பணியினை மேற்கொள்ளவும் இதற்கான செலவினத் தொகையை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவிடவும் நகராட்சி பொது நிதி குறைவுப்படும்போது 15வது மாநில நிதிக்குழுவின் கீழ் (15TH CFC) மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்டநிதி (SWM Tied Amount) நிதியிலிருந்து செலவிடவும் மேலும், மேற்படி பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :-</u>**

1, மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2,** அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ME.3) துறை, நாள் 24.08.2022-ல் வெளியிடப்பட்ட அரசாணையின்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.33553/2022/EA2-SWM-, நாள் 10.01.2023-ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு பணிகள் மேற்கெள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

3, மேற்படி பணியினை ஒப்பந்த்தாரரின் பணி திருப்திகராமாக இருப்பின் மன்ற ஒப்புதல் பெற்று மேற்படி ஒப்பந்த்தாரர் பணி நீடிப்பு செய்து பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்,

(ந.க.எண்.1967/2021/எச்1)

**தீர்மான எண்.01. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**2,** இந்நகராட்சி பொது சுகாதார பணியான திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு தேவையான 210 எண்ணிக்கையிலான தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி அடிப்படையில் நாளொன்றுக்கு ஒரு தூய்மை பணியாளருக்கு ரூ. 414/– (ரூபாய் நான்னூற்றி பதினாங்கு மட்டும் ) M/S L.D man power solution (P) LTD vellore, என்பவர் சப்ளை செய்து வருகிறார். மேற்படி நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தமானது 31.12.2022–ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் மேற்படி பணிக்கு பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துருக்கள் அனுப்பிவைக்கப்பட்டு உத்தரவு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புதிய ஒப்பந்தபுள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி கிடைக்க வேண்டியிருப்பதாலும் பொதுசுகாதார பணியின் அவசியம் கருதியும் ஏற்கனவே பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிறுவனத்தின் மூலம் 31.12.2022 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணியானது 31.12.2022 நிறைவு பெற உள்ளதால் புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு கால அவகாசம் தேவைபடுவதால் ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டு வரும் M/S L.D man power solution (P) LTD vellore, நிறுவனத்தின் மூலம் மேலும் 3 மாத காலத்திற்கு அதவாது (01.01.2023 முதல் 31.03.2023 வரை) இப்பணியினை அதே விலைவிகிதத்தில் 210 தினக்கூலி பணியாளர்களை சப்ளை செய்ய வேண்டி மேற்படி நிறுவனத்திற்கு 3 மாத காலத்திற்கு பணிநீட்டிப்பு செய்யவும், அதற்காகும் செலவினத் தொகை ரூ.90.00 லட்சத்திற்க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அத்தியாவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் M/S L.D. Man Power Solution pvt ltd Vellore, நிறுவனத்தின் மூலம் 03 மாதக் காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி பணிக்காகும் தோரய செலவினத் தொகையினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் :695/2018/எச்1.**

**தீர்மான எண்.02. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**3,** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 36 வார்டுகளில் டெங்கு, மலேரியா, சிக்குன்குன்யா மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவல் தடுப்பு முன்எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தேவையான 80 எண்ணிக்கையிலான தினக்கூலி பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் நாளொன்றுக்கு ஒரு DBC பணியாளருக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் தினக்கூலி

அடிப்படையில் ரூ. 367/— (ரூபாய் முன்னூற்றி அறுபத்தி ஏழு மட்டும்) அடிப்படையில் திருவாளர். L.D. manpower solution pvt.ltd,vellore என்ற நிறுவனத்தின் மூலம் பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணிக்கு மன்றத்தின் அங்கீகாரம் பெற்று 31.12.2022 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணியானது 31.12.2022 நிறைவு பெற உள்ளதால் புதிய ஒப்பந்தபுள்ளி கோர கால அவகாசம் தேவைப்படுவதால், மேற்கண்ட பணியின் அவசியம் கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்ததாரர் M/s.L.D.manpower solution,pvt ltd vellore நிறுவனத்தின் மூலம் பணியினை மேலும் 3 மாத காலத்திற்கு (01.01.2023 முதல் 31.03.2023 வரை) பணி நீட்டிப்பு செய்யவும் அதற்காகும் செலவினத் தொகை ரூ.30.00 இலட்சம் மட்டும் (ரூபாய் முப்பது இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பணியின் அவசியத்தை கருதி 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணிமேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண் : 1070/2020/எச்1**

**தீர்மான எண்.03. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

4.இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ள நகராட்சி பகுதிகளில் தினசரி சேரும் குப்பை மற்றும் கால்வாய் மண் ஆகியவற்றை இந்நகராட்சி வாகனங்கள் மூலம் உரக்கிடங்கிற்க்கு எடுத்து செல்லப்படுகிற்து, மேற்படி வாகனங்களை இயக்க போதிய நகராட்சி ஒட்டுநர்கள் இல்லாத காரணத்தினால் வாகனங்களை இயக்க தேவையான 15 ஒட்டுநர்கள் தேவைப்படுகிறது எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தினக்கூலி பட்டியலின் படி நாளொன்றுக்கு ஒரு ஒட்டுநர்க்கு கூலி ரூ. 518/— (ஐந்நூற்றி பதினெட்டு மட்டும்) அடிப்படையில் திருவாளர் M/S L.D man power solution pvt ltd vellore ஒப்பந்ததாரர் மூலம் 15 ஒட்டுநர்களை சப்ளை செய்யபட்டு 31.12.2022 வரை பணி மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் பெற்று பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணியானது 31.12.2022—ம் நிறைவு பெற உள்ளதால்

புதிய ஒப்பந்தபுள்ளி கோர நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி கிடைக்க வேண்டியிருப்பதாலும், பொதுசுகாரதார பணியின் அவசியம் கருதி மேற்கண்ட பணிக்கு 15 ஒட்டுநர்கள் அமர்த்திக் கொள்ள கோப்பு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளதால், மேற்படி திடக்கழிவு மேலாண்மை பணியினை தொடர்ந்து மேலும் 03 மாத காலத்திற்க்கு (01.01.2023 முதல் 31.03.2023 வரை) ஏற்கனவே பணியினை மேற்கொண்டு வரும் அதே ஒப்பந்ததாரரை

கொண்டு அதே விலை விகிதத்தில் பணியினை தெடர்ந்து மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 7.50 லட்சத்திற்க்கு அனுமதி கோரப்படுகின்றது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. திடக்கழிவு மேலாண்மை பணியின் அவசியத்தை கருதி மேற்படி பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் மூலம் பணியினை 03 மாத காலத்திற்க்கு மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**(ந.க. எண் 1250/2020/எச்1)**

**தீர்மான எண்.04. அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**ஓம்/– பி.ஏஜாஸ் அஹமத்**
தலைவர்
நகரமன்றம்,ஆம்பூர்